# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.12.2024 | தீபம் 30


# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்

# நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 20.11.2024 அன்று புதன்கிழமை ஒன்றுகூடலானது நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்வாக இடம்பெற்றது.

யாழ். நீரிழிவுக்கழகத்தின் ஆதரவுடன் இடம் பெற்ற இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலை நீரிழிவு நோய் வைத்திய நிபுணர் டாக்டர். ம.அரவிந்தன் அதிதி பேச்சாளராக கலந்து கொண் டார். நீரிழிவு கழகம் பற்றிய அறிமுக உரையை கழகத்தின் செயலாளர் க.கணபதி ஆற்றினார்.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முதலாம் வருட ஆரம் பப்பிரிவு ஆசிரிய மாணவன் நா.இராசநாதன் நிகழ்வு களை முன்னிலைப்படுத்தினார்.

ஆரம்பப்பிரிவு ஆசிரிய மாணவி திருமதி. ர.தேவ மணி ”நோயற்ற வாழ்வு” எனும் பொருளில் உரை நிகழ்த்தினார்.







01.11.2024 — 30.11.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி திரு திருநானந்தம் ஜெயகாண்டீபன் பணி நயப்பு வைபவம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாக பணியாற்றி எதிர்வரும் 02.12.2024 அன்று அகவை அறுபது எய்தி அரச சேவையிலிருந்து இளைப்பாறுகை பெறும் திருநானநந்தம் ஜெயகாண்டீபன் அவர்களின் பணிநயப்பு வைபவம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரமொளலீசன் லலீசன் தலைமையில் 28.11.2024 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

கலாசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் நல்லெண்ண வெளிப்பாடாக இடம்பெற்ற இப்பணிநயப்பு வைபவத்தில் முதுநிலை விரிவுரையாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரன் வாழ்த்துரை வழங்கினார். கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் பணி நயப்பு நாயகர் பற்றிய அறிமுக உரையை ஆற்றினார். விரிவுரையாளர் கு.பாலசண்முகன் பாராட்டுரை நல்கினார்.

பணி நயப்பு நாயகர்.தி.ஜெயகாண்டீபன் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.





# கலாதீபம்

කලාදීපම KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයකි.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### ஆரம்பக் கல்வி மாணவர்களின் ஆளுமை விருத்தியில் ஆசிரியர்களின் பங்கு

**இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்** என்ற கூற்றுக்கு இணங்க, கல்விச் சமூகத்தின் நாளைய தலைவர்களாக வளர்ந்து கொண்டிருக்கும் ஆரம்பப் பிரிவு மாணவர்களை சிறந்த ஆளுமை மிக்க பண்பு கொண்டவர்களாக செதுக்குவது 21ஆம் நூற்றாண்டு ஆசிரியர்களின் திறனும் வகிபாகமும் ஆகும்.

வகுப்பறையில் பல்வேறு வகையான கற்றல் கற்பித்தல் சூழலில் வசதி அளிப்பவர், கூட்டுப்பணியாளர், பயிற்சியாளர், வழிகாட்டியாளர், தொழில்நுட்பவியலாளர், மதிப்பீட்டாளர், புத்தாக்குனர், முகாமையாளர், கலாசாரமுகவர் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொள்பவர் போன்ற வகிபாகங்களை வகிப்பதன் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களின் ஆளுமை யை விருத்தி செய்ய முடியும்.

ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் சிறுவர்களுக்கு உரிய முறையில் வகுப்பறையை முகாமைத்துவம் செய்து, ஆக்கபூர்வமான கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். தமது கற்பித்தலில் பல நுட்பமுறைகளை கையாள வேண்டும். மாணவர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் விடய ஆய்வு, கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் கற்பித்தலில் ஈடுபடும் போது மாணவர்களுக்கு அறிவை இலகுவாக பெற்றுக் கொள்ளும் வழியை ஏற்படுத்தி, ஆளுமை விருத்தியை மேம்படுத்தலாம்.

மாணவர்களை ஆளுமை மிக்கவர்களாக மாற்றிய மைக்க ஆசிரியர், தன்னியல்பான பல ஆளுமை கூறுகளை விருத்தியாக்கிக் கொள்ள வேண்டும்.புதிய அறிவு விருத்தியும் தொழில்நுட்பக் கருவிகளை கையாள்வதில் பயிற்சியும் எண்ணங்களின் தெளிவான பார்வையும் என தன்னிலைகளை மாற்ற வேண்டியவர்களாக ஆசிரியர்கள் தம்மை காலத்திற்கு ஏற்றால் போல இற்றைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நாவலர் நினைவரங்கம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையை ஒட்டிய நாவலர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் சிலை முன்றிலில் 22.11.2024 வெள்ளி காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

கலாசாலையில் அமைந்துள்ள நாவலர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து ஆசிரிய மாணவர்கள் நாவலரது வெவ்வேறு பணிகளை முன்னிலைப்படுத்தி உரையாற்றினர்.

இந்து மன்ற காப்பாளர் விரிவுரையாளர் கு பாலசண்முகன் நிறைவுரை ஆற்றினார். விஞ்ஞான நெறி ஆசிரியமாணவர் செந்தூர்ச்செல்வன் நன்றியுரை ஆற்றினார்.

ஆறுமுகநாவலர் பற்றிய உரை ஆற்றிய ஆசிரிய மாண வர்கள் விபரம்

**ஆங்கிலநெறி**

1. திரு சிவராசா மயூரன்
2. திருமதி. கௌசிகா தினேஸ்
3. திருமதி சோபிகா நிரோசன்
4. திருமதி பிருந்தா சசிதரன்

**ஆரம்பக்கல்விநெறி**

1. திருமதி. மைதிலி கோகுலகண்ணன்
2. விஜிதா கமலவண்ணன்
3. செல்வி. சுதாயினி பாலசிங்கம்

**விசேடகல்விநெறி**

1. திருமதி. அஸ்மிலா பேகம்

**கிறிஸ்தவநெறி**

1. திருமதி கமலினி சுதாகர்



# News in Brief - Month of November

**06.11.2024**

**Awareness event on digital economy at the college**

It was held on Wednesday morning, The event, conducted by Maths Course Teacher Student S. Chandrakumar, Hatton National Bank Northern Regional Credit Manager M. Thayakaran as the guest speaker and delivered a special speech on the digital economy.

**20.11.2024**

**Diabetes Awareness Event**

Diabetes Awareness Event was held at the Kopay Teachers' College on Wednesday at 8.30a.m.

Jaffna Diabetes Society supported this event, in which Dr. M. Aravindan, a Diabetes specialist at the Jaffna Teaching Hospital, participated as the guest speaker.

**22.11.2024**

**SrilasSri Arumuga Navaler Gurupoosai** was organized by the Kopay Teachers' College Hindu union on Friday morning, under the Chairmanship of the College Principal Shandramouleesan Laleesan.

**28.11.2024**

**The Retirement Ceremony - President of the National College of Education, Jaffna Thirunanantham Jayakandeepan,** who will be retiring from Gov. service on 02.12.2024 at the age of sixty, serving as the President of the National College of Education, Jaffna, was held at the Rathilashmi Hall of the Kopay Teachers' College under the Chairmanship of the Principal of the College, Shandramoleesan Laleesan,

## கோப்பாய் மகா வித்தியாலய அதிபர் திரு சுப்பையா மோகனராஜன் மணிவிழா வாழ்த்து

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக அமைந்துள்ள கோப்பாய் மகா வித்தியால யத்தின் அதிபர் சுப்பை யா மோகனராஜன் தனது 34 வருட கல்விப் பணியை நிறைவு செய்து (17 ஆண்டுகள் ஆசிரியர் 17 ஆண்டு கள் அதிபர்) 22.11.2024 வெள்ளிக்கிழமை அரச சேவையிலிருந்து இளைப்பாறுகை பெறு கிறார்.

23.11.2024 சனிக்கிழமை அவரது அறுபதாவது பிறந்தநாள் ஆகும்

இதனை ஒட்டி பாடசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் மணிவிழா இடம்பெற்றது. இதில் கலாசாலை சார்பில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று அதிபர் சு. மோகனராஜன்





# டிஜிற்றல் பொருளாதாரம் பற்றிய விழிப்பூட்டும் நிகழ்வு
## திரு ம.தயாகரன் அவர்கள்
### (ஹற்றன் நஷனல் வங்கியின் வட பிராந்திய கடன்துறை மேலாளர்)
## கலந்து சிறப்பித்தார்

இலங்கையில் தற்போது பேசு பொருளாகியிருக்கும் டிஜிற்றல் பொருளாதாரம் பற்றிய விழிப்புணர்வு 06.11.24 நிகழ்வு புதன்கிழமை காலை இடம்பெற்றது.

கணிதநெறி ஆசிரிய மாணவன் செ.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹட்டன் நஷனல் வங்கியின் வடபிராந்திய கடன்துறை மேலாளர் ம.தயாகரன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டு டிஜிற்றல் பொருளாதாரம் பற்றி சிறப்புரை ஆற்றினார்.

இவருக்கான அறிமுகவுரையை கலாசாலை விரிவுரை யாளர் கு. பாலஷண்முகன் ஆற்றினார். விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி திருமதி வீரராகவன் மயா தேவி கல்வித்துறையில் தொழினுட்பப் பயன்பாடுகள் என்ற பொருளில் ஆசிரியமாணவர் உரையை வழங் கினார்.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவு உரையாற்றினார். அதிதிப் பேச்சாளர் ம. தயாகரன் கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.















# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்

"கற்பித்தல் என்பது உயர்வானதொரு வாண்மைத் தொழிலாகும். அது ஒரு தனி நபரின் குணவியல்புகள், திறமைகள் மற்றும் எதிர்காலத்தினை வடிவமைக்கின்றது. என்னை ஒரு சிறந்த ஆசிரியனாக மக்கள் நினைவில் வைத்துக் கொள்வாரெனில் அதுவே எனக்குக் கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும்." – Dr.A.P.J.அப்துல் கலாம்.



திருமதி ஜீவாஜினி கேசவன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை








உலகளாவிய ரீதியில் கல்வி தொடர்பாக இன்று அறிவுப் பொருளாதாரம் மற்றும் உலகமயமாதல் போன்ற கொள்கை விருத்தி பற்றி அதிகம் பேசிக் கொள்ளும் தருணத்தில் கல்வியின் புதிய போக்குகளுக்கும் கைத்தொழில் புரட்சிக்குமிடையில் நெருங்கிய பிணைப்பு இருப்பதனை நாம் மறந்துவிட லாகாது. கல்விப் புலத்தில் காலத்திற்குக் காலம் **முன்னுதாரண மாற்றம் (Paradigm Shift)** ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணியாய் அமைவது கைத்தொழிற் புரட்சியின் தாக்கமே என்பதை யாராலும் மறுப்பதற்கியலாதெனலாம். கைத்தொழிற் புரட்சியின் விளைவாக உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கான பிரதான கால வரிசையாகப் (Time Line) பின்வரும் நிலைமைகளைக் கருத்திற் கொள்ளமுடியும்.

கைத்தொழிற் புரட்சியின் முதல் அலையாகக்(1.0) கொள்ளத்தக்க நீராவி இயந்திரத்தின் வருகையும் இரண்டாவது அலையாகக்(2.0) கொள்ளப் படுகின்ற மின்சாரத்தின் கண்டுபிடிப்பும் மூன்றாவது அலையாகக்(3.0) கொள்ளப்படும் கணினியின் அறிமுகமும் தற்போது அதிகளவில் பேசப்படும் நான்காவது அலையான(4.0) வலையமைப்பின் ஆளுகையும் கல்வித் துறையில் மட்டுமன்றி அனைத்துத் துறைகளிலும் பாரிய தாக்கம் செலுத்துவதோடு, ஆதிக்கம் செலுத்துவதனையும் நாம் கண்கூடாகக் காணமுடிகிறது. மேலும் தற்போது 'AI' எனப்படும் செயற்கை நுண்ணறிவு யுகத்தினை நோக்கி எமது வாழ்க்கைப் பயணம் மட்டுமன்றிக் கல்விப் பயணமும் நகரத் தொடங்கியுள்ளது.


# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்








இலங்கையைப் பொறுத்தவரையில் பொதுக்கல்வியை வழங்கும் பிரதான நிறுவனங்களாகப் பாடசாலைகள் விளங்குகின்றன. கட்டாயக் கல்விச் சட்டத்தின் பிரகாரம் 5 முதல் 16 வயதுக்குட்பட்ட அனைத்துப் பிள்ளைகளும் பொதுக் கல்வியைப் பெற உரித்துடையோராவர். இன்று பாடசாலைச் செயற்பாடுகள் சிக்கல் மிக நிறைந்தவையாகக் காணப்படுகின்ற போதிலும் பொதுவாக உள்ளீடு, செயன் முறை மற்றும் விளைவுகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டுச் செயலொழுங் காக அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

மிக விரைவாக மாறிவரும் உலக நடப்புக்களுக்கு முகம் கொடுக்கும் நோக்கிலும் இலங்கை போன்ற வளர்ந்து வரும் மூன்றாம் உலக நாடுகளின் கல்விக் கொள்கைகளில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சார்க் அமைப்புக்கள் போன்றவற்றின் தலையீடுகளும் செல்வாக்குகளும் காணப்படுவதனாலும் கல்விப் புலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு முகம் கொடுப்பதற்காக, தம்மை இற்றைப்படுத்தித் தமது வகிபாகத்தினைத் திறம்பட ஆற்றுவதற்குத் தம்மைத் தயார் நிலையில் வைத்திருப்பது ஆசிரியர் உட்பட அனைத்துக் கல்விப்புலம் சார் ஆளணியினரதும் தலையாய கடமையாகும்.




# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்




பாடசாலைக் கல்வியின் கலைத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் தொடர்பாகப் பலவேறு கருத்துக்கள் நிலவுகின்ற போதிலும் கற்றற் பேறுகளை மையப்படுத்திய கலைத்திட்டத்தை நோக்கிப் பயணிக்கின்ற அதேவேளை, தற்போது நடைமுறையிலுள்ள கலைத்திட்டம் தேர்ச்சி மட்டங்களினூடு கற்றற் பேறுகள் அடையப்படுவதனை நோக்காகவும் கொண்டு வகுக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு தேர்ச்சி யினூடு அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன் என்பவற்றை அடைவதற்கு வழிப்படுத்துவனவாய் அமைவதுடன் அதற்கூடாக சமூகத் திறன்கள், ஆளுமைத் திறன்கள், சிந்தனைத் திறன்கள் போன்றவற்றைக் கட்டியெழுப்பி வாழ்க்கைப் பழக்கமாக்குவதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம் மிகச் சிக்கலானதாக இன்று பலராலும் உணரப்பட்டு வருகின்றது. அதற்கான பிரதான காரணியாக விளங்குவது தொழினுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சிப் போக்காகும். தற்போது ‘AI’ யுகத்தினை நோக்கி நகரத் தொடங்கியுள்ள எமது கல்விப் பயணத்தில் நாமும் சரிநிகராக இணைந்து பயணிக்க வேண்டுமாயின் ஆசிரியத்துவத்துடன் தொடர்புடைய நாம் அனைவரும் எம்மைப் பொருத்தமுறப் புடம் போட்டு வளப்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவரது தலையாய கடமையாகும். இல்லையேல் நாம் கல்விப் புலத்திலிருந்து ஓரங்கட்டப்படுவது தவிர் க்க இயலாததாகிவிடும்.







# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்

தற்போதுள்ள தொழினுட்ப யுகத்தில் கற்கும் பிள்ளைகள் 4.0 கல்வி எனக் அழைக்கப்படும் தொழினுட்பத்துடன் இரண்டறக் கலந்த கல்விப் புரட்சியுடன் இணைந்துள்ள அல்பா தலைமுறையைச் சேர்ந்தோராகக் கருதப்படுகின்றனர். Mc Crindle Research நிறுவுனர் Mc Crindle இன் கருத்துப்படி 2010 முதல் 2024 வரையான காலப்பகுதியில் பிறந்த பிள்ளைகள் அல்பா தலைமுறைக்குரிய பிள்ளைகளாகக் கருதப்படுகின்றனர். அதாவது தற்போது பாடசாலைக் கல்வியைத் தொடரும் மற்றும் இன்னும் சில காலம் தொடரப் போகும் பிள்ளைகள் அல்பா தலைமுறைக்குரியோரே.

அல்பா தலைமுறையினர் எனப்படுவோர் டிஜிட்டல் சாதனங்களின் சகாப்தத்தில் பிறந்தவர்கள். இவர்கள் 'டிஜிட்டல் பூர்வீக வாசிகள்'(**Digital Natives**) எனவும் அழைக்கப்படுவதுண்டு. தொழினுட்பமும் இணையமும் தமது அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக எப்போதுமே இருக்கும் உலகில் வளர்பவர்கள் இவர்கள். திறன் செல்லிடத் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் இல்லாத உலகத்தை அறியாத முதல் தலைமுறையினர் இவர்களே. இதன் விளைவாகவே ஏனைய தலைமுறையினருடன் ஒப்பிடும் போது உலகத்தைப் பற்றிய வித்தியாசமான புரிதலைக் கொண்டுள்ளோராகக் காணப்படுகின்றனர். அத்தோடு ஏனைய தலைமுறையினரை விடவும் அதிகமான தகவல்களைக் கற்றவர்களாகவும் அணுகக் கூடியோராகவும் இருப்பார்கள். மேலும் பொறுமையான வாசிப்பில் ஆர்வம் காட்டாது தமக்குத் தேவையானவற்றைப் பிறர் மூலமாகவோ அன்றேல் இணையம் மற்றும் தொழினுட்ப சாதனத்தின் உதவியுடனோ இலகுவில் அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத்துவோராகவும் காணப்படுவர். இணையத்தின் இந்த அதிகரித்த ஈடுபாடு காரணமாக அவர்களது சமூகத் திறன்கள் மீதான வெளிப்பாடு மட்டுப்பாடு நிறைந்ததாகவே காணப்படலாம். தொடர்ந்தும் மாறி வரும் டிஜிட்டல் புரட்சியின் சவால்களுக்கு முகம் கொடுத்து அவர்களை செழிப்பான, வளமான சமூகமாகக் கட்டியெழுப்புவதற்கான அணுகுமுறைகள் மற்றும் உபாயங்களைத் தேடிக் கண்டறிந்து பிரயோகிக்க வேண்டியது இன்றைய ஆசிரியர்களது பிராதான வகிபாகமாக அமைகிறது.



# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்

எனவே அத்தகையோரைக் கையாள்வதற்கு ஆசிரியர் பின்வரும் 21ஆம் நூற்றாண்டுத் தேர்ச்சித் திறன்களைத் தம்மிடையேயும் தம் மாணவரிடையேயும் விருத்தி செய்துகொள்ளவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

எனவே அதற்குப் பொருத்தப்பாடான கற்பித்தற் திறன்களுடன் பின்வரும் பண்புகளையும் ஆசிரியர் தம்மிடம் வளர்த்துக் கொள்ளவேண்டியவராகிறார்.

- கணினி மற்றும் தொழினுட்பத்துடனான பரிட்சயம்
- படைப்பாற்றலும் தர்க்க ரீதியான சிந்தனையும்
- வாழ்நாட் கற்றலில் ஆர்வம்
- புத்தாக்கச் சிந்தனையும் சவால்களை எதிர்கொள்ளலும்
- சிறந்த ஆளிடைத் தொடர்பு பேணலும் முன்மாதிரியாகத் திகழ்தலும்
- அறிவு இற்றைப்படுத்தல், நிபுணத்துவம் மற்றும் பிரயோகம்

மேலும் இன்றைய சிக்கல் நிறைந்த உலகில் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை வளப்படுத்தும் நோக்கில் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினைத் திட்டமிடும்போது பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்ளப்படுதல் அவசியமாகக் கருதப்படுகின்றது.

- விளையாட்டு மற்றும் சமூக இடைவினையுடனான கற்றற் செயற்பாடு
- தொழினுட்ப சாதனத்தின் பொருத்தப்பாடான பயன்பாடு
- 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான திறன்கள்
- வாழ்க்கை நீடித்த கற்றலுக்கான அடித்தளம்
- சவால்களை எதிர்கொள்ளலும் நேர்மனப்பாங்கு விருத்தியும்







**“தன்னம்பிக்கை, சுயகட்டுப்பாடு, பரந்த அறிவு, தலைமைத்துவம், வசீகரிக்கும் தன்மை, சரியான முடிவெடுத்தல், உளத்தைரியம், நடுவு நிலைமை, மற்றவர் விரும்பும் மனப்பாங்கு, சுறுசுறுப்பு, நேரம் தவறாமை, மாணவரைப் புரிந்துகொள்ளல், வகுப்பறை ஒழுங்கமைப்பு, வகுப்பறை நிருவாகம், கற்பித்தலியல் நுட்பங்கள் என்பன ஆசிரியரின் வாண்மைத்துவம் சார்ந்தவையாகும்”. (M.T. Denial:2000)** எனும் கூற்றிற்கிணங்க ஆசிரியர் வெறுமனே அறிவைக் கையளிப்பவர் என்ற நிலையினைக் கடந்து தமது வாண்மைத்துவத்தினைத் தகவமைத்துக் கொள்ளல் அவசியம்.

# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்

எனவே இன்றைய ஆசிரியர்கள் **'TPCK'** அறிவினைக் கொண்டோராயிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. **'TPCK'** எனப்படுவது தொழினுட்ப போதனா சார் உள்ளடக்க அறிவு என்பதாகும். அதாவது தொழினுட்ப அறிவு, போதனாசார் அறிவு மற்றும் உள்ளடக்க அறிவு ஆகிய மூன்று வகையான அறிவு, திறன்களையும் ஒன்றிணைத்துப் பொருத்தமுறப் பிரயோகிக்கும் அறிவே **தொழினுட்ப போதனா சார் உள்ளடக்க அறிவு** (TPCK) எனப்படுவதாகும்.

***உள்ளடக்க அறிவு***

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடவிடயங்களில் போதிய அறிவுத் தெளிவு மற்றும் நிபுணத்துவத்தினைப் பெற்றிருப்பது உள்ளடக்க அறிவு எனப்படுகிறது. தாம் கற்பிக்கும் பாட அலகுடன் தொடர்புடைய

- மையக்கருத்துக்கள்
- எண்ணக்கருக்கள்
- கோட்பாடுகள்
- பாட அலகுடன் தொடர்புடைய பல்வேறு செயன்முறைகள் பற்றிய போதிய அறிவினைக் கொண்டிராமல் சிறந்த முறையில் கற்பித்தலை மேற்கொள்ள முடியாது.

***போதனா அறிவு***

ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத்தில் சிறந்து விளங்க, போதிய போதனா அறிவையும் பிரயோகிக்க வல்லோராய் இருத்தல் அவசியம். போதனா அறிவு எனப்படுவது

- பல்வேறு கற்றல் கற்பித்தல் முறைகள், முறையியல்கள் மற்றும் அணுகுமுறைகள்
- வகுப்பறை முகாமைத்துவம்
- கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகள்
- பாடவேளை திட்டமிடல்
- மாணவர் எவ்வாறு கற்கின்றனர் போன்ற இன்னோரன்ன விடயங்களில் போதிய பிரயோக அறிவினைக் கொண்டிருத்தல் ஆகும்.

***தொழினுட்ப அறிவு***


ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையின் வினைத்திறனை அதிகரிக்கவும் பாட விடயத்தை இலகுவாக மாணவர்களிடத்தே பரிமாற்றம் செய்யவும் பல்வேறு கற்பித்தல் நுட்பங்களைக் கையாள வேண்டி உள்ளனர். இதனை, கற்பித்தல் தொழினுட்பம் அல்லது கல்வித் தொழினுட்பம் எனவும் அழைப்பர். தொழினுட்ப அறிவு எனப்படுவது கரும்பலகை, வெண்கட்டி போன்ற ஆகக் குறைந்த மட்டத்திலான கற்பித்தல் தொழினுட்பம் முதல் இன்றைய டிஜிட்டல் யுகத்தில் பயன்பாட்டிலுள்ள:-

- இணையம்
- கணினிப் பயன்பாடு
- ஊடாடும் வெண் பலகைகள்
- டிஜிட்டல் காணொளிகள்
- பல்வேறு மென்பொருட்கள்
- திறன் செல்லிடத் தொலைபேசியில் பயன்படுத்தக்கூடிய செயலிகள் வரையிலான நவீன தொழினுட்பப் பயன்பாடு சார் பிரயோக அறிவாகும்.

# அல்பா தலைமுறை (Alpha Generation) மாணவர்களுக்கான கற்பித்தலில் 21 ஆம் நூற்றாண்டு ஆசிரியரது வகிபாகம்




தொழினுட்ப அறிவு, போதனாசார் அறிவு மற்றும் உள்ளடக்க அறிவு ஆகிய மூன்று வகையான அறிவு, திறன்களையும் ஒன்றிணைத்துப் பொருத்தமுறப் பிரயோ-கிக்கும் **தொழினுட்ப போதனா சார் உள்ளடக்க அறிவு** எனப்படும் **'TPCK'** தொடர்பாகத் தம்மை வளப்படுத்துவதன் மூலமே அல்பா தலைமுறை மாணவர் களுக்குக் கற்பிப்பதில் கல்விப் புலத்தில் ஆசிரியர் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ளமுடியும் என்பது தெளிவாகின்றது.




தேசிய கல்வி இலக்குகளையும் குறிக்கோள்களையும் முறைமைசார் கல்விக்கூடாக சட்டரீதியாகவும் விதிமுறை யாகவும நிறைவேற்றிக் கொள்வ தற்குப் பொறுப்பும் அதிகாரமும் கொண்ட சமூக நிறுவனமாக விளங்குவது பாடசாலைகளே. அத்தகைய சமூகப் பொறுப்பு வாய்ந்த பணிகளைச் செவ்வனே நிறைவேற்று வதற்குரிய பிரதான மனித வளமாகிய ஆசிரியர்கள் தமது ஒப்பற்ற சமூகப் பொறுப்பினை மனதிற் கொண்டு தம்மையும் வளப்படுத்தித் தாம் சார்ந்து பணியாற்றும் சமூகத்தினையும் தற்கால உலகின் போக்கிற்கேறப வளப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

